# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2464/ 05 - 2025 නොවැම්බර් මස 25 වැනි අඟහරුවාදා - 2025.11.25**

2464/05 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**அறிவித்தல் இலக்கம் 1**

**(175 ஆவது அத்தியாயமான) யாத்திரைக் கட்டளைச் சட்டம்**

**சிவனொளிபாத மலை யாத்திரைக் காலம் - 2025/2026**

மேற்குறிப்பிட்ட யாத்திரைக் காலம் 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி முதல் 2026 ஆம் ஆண்டு மே மாதம் 30 ஆந் திகதி வரை நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு அறிவிக்கின்றேன்.

யாத்திரைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதிகள் யாத்திரைக் காலத்தில் செல்லுபடியாகும் என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

1948, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க வர்த்தமானி

1949, யூலை மாதம் 22 ஆந் திகதிய 10000 ஆம் இலக்க வர்த்தமானி

1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11255 ஆம் இலக்க வர்த்தமானி

1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12508 ஆம் இலக்க வர்த்தமானி

1962, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12947 ஆம் இலக்க வர்த்தமானி

2017, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2034/33 ஆம் இலக்க வர்த்தமானி

**கே.ஜீ.எஸ். நிஷாந்த,**
மாவட்ட செயலாளர் /அரசாங்க அதிபர்,
இரத்தினபுரி மாவட்டம்.

இரத்தினபுரி மாவட்ட செயலகம்.

**அறிவித்தல் இலக்கம் 2**

**சிவனொளிபாத மலை யாத்திரைக் காலம் - 2025/2026**

1948 ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9859 ஆம் இலக்க வர்த்தமானி, 1949, யூலை மாதம் 22 ஆந் திகதிய 10000 ஆம் இலக்க வர்த்தமானி, 1958, பெப்புருவரி மாதம் 07 ஆந் திகதிய 11255 ஆம் இலக்க வர்த்தமானி,1961, யூலை மாதம் 07 ஆந் திகதிய 12508 ஆம் இலக்க வர்த்தமானி, 1962, மாச்சு மாதம் 02 ஆந் திகதிய 12947 ஆம் இலக்க வர்த்தமானி, 2017, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதிய 2034/ 33 ஆம் இலக்க வர்த்தமானி, ஆகியவற்றின் முதல் யாத்திரைக் காலம் தொடர்பான ஒழுங்கு விதியினை பொது மக்களின்அவதானத்திற்குசெலுத்துகின்றேன்.இவ்ஒழுங்குவிதிதொடர்பாககீழ்க்குறிப்பிட்டவிடயங்களைஅறியத்தருகின்றேன்.

**01. ஓய்வறை/அம்பலம் என்பது**

1.1 அந்தந்த இடங்களில் அரசு மற்றும் அமைப்புகளால் சட்டபூர்வமாக கட்டப்பட்ட ஓய்வு இல்லங்கள்/அம்பலங்கள் என்பவற்றையே யாத்திரீகர்கள் ஓய்வெடுக்கவும். தங்கவும் தங்குமிடமாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

1.2 தற்காலிக தங்குமிடங்கள் தயார் செய்தல் அல்லது நடாத்திச் செல்லுதல் கூடாது.

**02. கட்டிடங்கள் கட்டுதல்**

என்னால் அல்லது அதிகாரமுடைய அதிகாரியின் வழங்கப்பட்ட எழுத்துமூல அனுமதியின்றி எவராலும் 2025, திசெம்பர் மாதம் 04 ஆந் திகதி முதல் 2026 மே மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் நிரந்தர அல்லது தற்காலிக கட்டிடம், தங்குமிடம் வியாபாரத் தலம் போன்றன நிறுவக் கூடாது.

**03. யாசகர்கள்**

சிவனொளிபாத மலை மேற்தளத்தில் அல்லது அம்பலத்தில்/ஓய்வறைப் பகுதியில் எந்தவோர் இடத்திலும் யாசகர்கள் யாசகம் கேட்டலோ அல்லது பெறுதலோ எவராலும் யாசகம் வழங்குதலோ அல்லது விநியோகித்தலோ கூடாது.

**04. குளித்தல் மற்றும் கழுவுதல்**

4.1 தற்போதும் வனப் பாதுகாப்புத் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் அடையாளம் காணப்பட்டு பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பான இடங்களின்றி ஏனைய இடங்களில் குளித்தல் அல்லது துணிகளை கழுவுதல் கூடாது.

4. 2 தனியார் நிறுவனங்கள் மூலம் குளித்தல் அல்லது துணிகளைத் துவைத்தல் போன்ற வசதிகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை மேற்கோள்வதாயின் அதற்காக வனப் பாதுகாப்புத் திணைக்களம். உள்ளூராட்சி மன்றம் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சட்டபூர்வமான எழுத்து மூல அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**05. வாகனம் /பிரயாணப் பாதை**

5.1 பிரதேச சபை அல்லது உரிய உள்ளூராட்சி மன்றங்களினால் ஒதுக்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் வாகனங்கள் நிறுத்துதல் அல்லது வாகனங்களை உட்பிரவேசித்தல் கூடாது.

5.2 ரஜமாவத்த (பலாபத்தல வீதி), ஹட்டன் - நல்லதண்ணி வீதி மற்றும் குருவிட்ட - எரத்ன வீதி ஆகியவையே யாத்திரைக்காக ஒதுக்கப்பட்டுள்ள பிரதான பாதைகளாகும்.

**06. சுற்றாடல் மற்றும் உட்கட்டமைப்பு**

6.1 யாத்திரை பாதையில் அல்லது சிவனொளிபாத மலையின் மேற்தளத்தின் சுற்றுப்புறத்தில் அல்லது ஓய்வு சாலை அருகே சுற்றாடலை மாசுபடுத்தும் விதமாக பொலித்தீன், பிளாஸ்டிக் என்பவற்றை முறையற்ற விதத்தில் வெளியேற்றல் கூடாது.

6.2 சிவனொளிபாத மலை வனப்பிரதேசத்தினுள் எந்த ஒரு காரணத்திற்காகவும் தீ பிடிக்கும் வகையிலான தீச்சுவாலைகள் ஏற்றுதல் தீயை பற்றவைத்தல் கூடாது.

6.3 யாத்திரைக் காலத்தில் பக்தர்களுக்கான சுகாதார வசதிகளை வழங்குதல் மற்றும் குப்பைகளை அகற்றும் நடவடிக்கைகளை உள்ளூராட்சி மன்றங்களுக்கு மற்றும் மாவட்ட சுகாதார சேவை பணிப்பாளர் காரியாலயத்திற்கு வழங்கப்படுகின்றது.

**07. வைத்திய வசதிகள்**

தனியார் நிறுவனங்கள் ஊடாக வழங்குவதற்கு எத்தனித்துள்ள வைத்திய வசதிகள், வைத்திய சிகிச்சை/ முதலுதவி மத்திய நிலையங்களுக்கான மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் மற்றும் உள்ளூராட்சி மன்றத்தின் எழுத்து மூல அனுமதியினைப் பெறல் வேண்டும்.

**08. வியாபாரம் மற்றும் நன்கொடை**

8.1 சிவனொளிபாத மேல் தளத்தில், ஓய்வறைப் பிரதேசங்களில் மற்றும் பயணிக்கும் வீதியில் நடமாடும் வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

8.2 என்னால் அல்லது அதிகாரமுடைய அதிகாரியினால் அனுமதியளிக்கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் பூஜைப் பொருட்கள், பூஜைக்கான தட்டுகள், உணவுப் பொருட்கள் அல்லது ஏனைய பொருட்களை விற்பனை செய்யக்கூடாது.

8.3 மதுபானம், புகைத்தல் பொருள் அல்லது வேறு ஏதேனும் போதைப் பொருட்கள் யாத்திரையின் போது எடுத்துச் செல்லல் அல்லது வியாபாரக் கடைகளில் வைத்தல், விற்பனை செய்தல் அல்லது உபயோகித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

8.4 உட்பிரவேசிப்பு வீதி ஓரங்களில் அனுமதிக்கப்பட்ட இடங்களைத் தவிர்ந்த ஏனைய எந்த இடத்திலும் தற்காலிக அல்லது நிரந்தர வியாபாரத் தலங்ளை அமைத்தல் அல்லது நடாத்திச் செல்லல் அல்லது வியாபாரம் செய்தல் கூடாது.

8.5 அனைத்து வியாபாரத் தலங்களிலும், கட்டடங்களிலும் குப்பைகளை அகற்றுவதற்கான குப்பைக் கூடைகளை வைத்திருப்பதுடன் கழிவுப்பொருட்கள் அதனுள் இடப்பட வேண்டும்.

8.6 வியாபாரத்திற்காக தயாரித்து வைக்கப்பட்டுள்ள உணவுப் பண்டங்களில் ஈக்கள் படியாதவாறு பாதுகாப்பான முறையில் மூடி வைக்க வேண்டும்.

8.7 அன்னதானம் (தன்சல்) வழங்கப்படும் பட்சத்தில் அக்காலகட்டத்திற்கேற்ற சுகாதார நிலைமைகளை கருத்திற்கொண்டு அதனை மேற்கொள்வதோடு அதற்காக என்னால் அல்லது அதிகாரமுள்ள அதிகாரி ஒருவரினால் ஏற்கனவே அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**09. கொவிட் - 19 தொற்று காலத்தினுள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள்.**

நாட்டில் நிலவும் தொற்றுநோய் நிலைமையை கருத்திற் கொண்டு சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட முறையான சுகாதார வழிமுறைகளை பின்பற்றி வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டும்.

**10. சிவனொளிபாத மலை யாத்திரைக்கு வருகை தரும் நபர்கள் சிவனொளிபாதமலை மேற் தளத்தில் தங்குவதை தவிர்த்து யாத்திரை முடிந்ததும் உடனடியாக வெளியேற வேண்டும்.**

இந்த வர்த்தமானி நுவரெலியா மாவட்ட செயலாளரின் ஒப்புதலுடன் வெளியிடப்பட்டுள்ளது மற்றும் இது ஹட்டன் - நல்லதண்ணி வீதி, இரத்தினபுரி - பலாபத்தல வீதி மற்றும் குருவிட - எரத்ன வீதி ஆகிய மூன்று வழித்தடங்களுக்கும் பொருந்தும்.

**கே.ஜீ.எஸ். நிஷாந்த,**
மாவட்ட செயலாளர் /அரசாங்க அதிபர்,
இரத்தினபுரி மாவட்டம்.

இரத்தினபுரி மாவட்ட செயலகம்,
2025, நவெம்பர் மாதம் 21.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.